## கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
## விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்

**OS.No :** 12/2017 நாள் 25.07.2025.

வாசா.1, திரு. முத்துக்குமார்

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 1 மற்றும் 2 எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

இதே வழக்கு பரிகாரம் சம்மந்தமாக சிவகாசி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.229/2012 வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்து அந்த வழக்கு நிலுவையில் இருந்தது என்று சொன்னால் அந்த வழக்கில் நிரந்தர உறுத்துக்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே பரிகாரம் கோரப்பட்டிருந்தது விளம்புகை பரிகாரம் கோரப்படாததால அந்த வழக்கானது தள்ளுபடி ஆனது. அதற்கு பின்பு தான் இந்த வழக்கானதை நாங்கள் இந்த நீதிமன்றத்தில் விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்தோம் . அ.வ.எண்.229/2012 என்ற வழக்கை நாங்கள் தாக்கல் செய்துகொள்வதற்கு முன்பாக சிவகாசி மாவட்ட உரிமையியில் நீதிமன்றத்தில் அ.வ.எண.32/2012 என்ற வழக்கை உறுத்துக்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருந்தோம் என்றால் சரிதான். மேற்படி அ.வ.எண்.32/2012 வழக்கில் இவ்வழக்கில் உள்ள 1, 2 எதிர்வாதிகளை தரப்பினராக சேர்த்துக்கொள்ள வேண்டி அவர்கள் மனு தாக்கல் செய்தவுடன் அந்த அ.வ.எண்.32/2012 யை நான் வாபஸ் பெற்றுக்கொண்டேன் என்றால் உண்மை தான். அ.வ.எண்.32/2012 ல் எதிர்வாதிகளாக காண்பிக்கப்பட்டிருந்த பிச்சைக்கனி, ராஜேந்திரன் ஆகியோர்கள் எங்களது உறவினர்கள் என்றால் அவர்கள் அந்த கோவிலில் வழிபாடு செய்பவர்கள் ஆவார்கள். அ.வ.எண்.32/2012 என்ற வழக்கு நிலுவையில் இருந்த பொழுது சிவகாசி மாவட்ட உரிமையியில் நீதிமன்றத்தில் அ.வ.எண்.13/2013 என்ற வழக்கு விசாரணையில் இருந்தது என்று சொன்னால் அது சரியல்ல. அ.வ.எண்.13/2013 ல் எங்களையும் தரப்பினராக சேர்க்க வேண்டும் என்றுசொல்லி நாங்கள் மனு தாக்கல் செய்திருந்து அந்த மனுவானது தள்ளுபடி ஆனதுஎன்று சொன்னால் சரிதான். அ.வ.எண்.13/2013 ல் இவ்வழக்கின் 2, 3 வாதிகளான டி.மனோகரன், கே.குருவராஜ் ஆகியோர்கள் தங்களையும் தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று சொல்லி மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனுவும் தள்ளுபடி ஆனது என்று சொன்னால் அது சரிதான். சிவகாசி மாவட்ட உரிமையயில் நீதிமன்றத்தில் நாங்கள் தாக்கல் செய்திருந்த அந்த இடைக்கால மனுவில் பிறந்த உத்தரவினை ஆட்சேபித்து நாங்கள் சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் ஒரு சீராய்வு மனுவை தாக்கல் செய்திருந்து அந்த சீராய்வு மனுவும் தள்ளுபடி ஆனது என்றுசொன்னால் அது சரிதான். சிவகாசி சார்பு நீதிமன்றத்தில் அப்பீல் வழக்கு எண்கள் 23/2016 மற்றும் 28/2016 ஆகியவைகளில் எங்கள் தரப்பில் அ.வ.எண்.69/1981, அவ.எண்.88/1978 ஆகிய வழக்குகள் பற்றி சொல்லப்பட்டிருந்தது என்று சொன்னால் அப்படியில்லை. இந்த அசல் வழக்கு விரபங்கள் எனக்கு தெரியும் என்றும் அதற்கு விரோதமாக நான் தற்பபொழுது சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. சாட்சி மீண்டும் தானாக இந்த விபரங்கள் தனக்கு 2011 ம் ஆண்டு தான் தெரியும் என்று சாட்சியம் அளிக்கிறார்.வழக்கில் உள்ள 4 ம் வாதியாக

காட்டியுள்ள அருள்மிகு ஸ்ரீகம்ப காமட்சியம்மன், காத்தவராயன் வழிபடுபவர்கள் சங்கம் என்று காண்பித்து அவர்களுடைய இருப்பிட முகவரியாக அருள்மிகு ஸ்ரீகம்ப காமட்சியம்மன் காத்தவராயன் திருக்கோவில் என்று தான் காண்பித்திருந்தோம் என்று சொன்னால் அது சரிதான். மேற்படி அருள்மிகு ஸ்ரீகம்ப காமட்சியம்மன் காத்தவராயன் திருக்கோவிலுக்கு யார் செயலாளர் என்றும் சொல்லாமலும் அவருடைய கையொப்பமும் செய்யப்படாமலும் உள்ளது என்று சொன்னால் அப்படியில்லை மேற்படி திருக்கோவிலுக்கு நான் அப்பொழுது செயலாளராக இருந்தமையால் மேற்படி தொண்டைமான், செம்மான், சேர்வை, பாணார் சமுதாய மக்களின் பிரதிநிதித்துவம் என்ற முறையில் நான் பிராதில் கையொப்பம் செய்துள்ளேன்.மேலும் அருள்மிகு ஸ்ரீகம்ப காமட்சியம்மன் காத்தவராயன் திருக்கோவிலின் சங்க செயலாளர் என்ற முறையில் பிராதில் நான் கையொப்பம் செய்துள்ளேன். மேற்படி திருக்கோவிலின் சங்கத்தை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதா என்று கேட்டால் சங்கங்களின் பதிவு சட்டப்படி பதிவாகியுள்ளது. நான் வழக்குரையில் நான்கு ஜாதிகள் என்று சொல்லியுள்ளேன். அவைகள் எந்தெந்த ஜாதிகள் யார் யார் எங்கு குடியிருக்கிறார்கள் என்று நான் சொல்லியுள்ளேனா என்று கேட்டால் அது பற்றி உறுதியாக சொல்லமுடியாது அவர்கள் பல ஊர்களில் இருப்பார்கள். அவர்கள் தான் என்னை பிரதிநிதியாக தேர்ந்தெடுத்தார்கள் என்பதற்கான ஆவணம் உள்ளதா என்று கேட்டால் இல்லை. வழக்கில் உள்ள வாதி குருவராஜ் என்பவர் தொண்டைமான் சமூகத்தை சார்ந்தவர்.மனோகரன் என்பவர் செம்மான் சமுகத்தை சார்ந்தவர்.நான் தொண்டைமான சமூகத்தை சார்ந்தவர். சாட்சி மீண்டும் தானாக தன் தகப்பனார் சேர்வை சமுதாயத்தை சார்ந்தவர் என்றும் தன்தாயார் தொண்டைமான் சமூகத்தை சார்ந்தவர் என்றும் எனக்கும் என் அண்ணன் தம்பிகளுக்கும் சேர்த்து தொண்டைமான் சமூகத்தை சார்ந்தவர்கள்என்று பள்ளி சான்று மற்றும் பல சான்றுகளில் போட்டுள்ளார்கள். பாணர் சமூகத்திற்கு யாரும் பிரதிநிதியாக வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்குரையில் நான்கு ஜாதிகள் என்று பொய்யாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பொய். வழக்குரையில் குறுந்தலைப்பு மற்றும் நெடுந்தலைப்பில் பாணர் சமுதாயத்தை சார்ந்தவர் என்று யார் பெயரையும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.அவர்கள் சங்கத்தில் உறுப்பினராக உள்ளார்கள். இந்த வழக்கானதை சங்கம் செயல்படவில்லை என்று சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளோமா அல்லதுஇந்த கோவில் தங்களுக்கு வேண்டும் என்று சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளோமா என்று கேட்டால் இந்த கோவில் நான்கு சமுதாய மக்களுக்கும் வேண்டும் என்று சொல்லித்தான் வழக்கை போட்டுள்ளோம். வழக்கில் இறந்துபோன 1ம் எதிர்வாதியான பரமானந்தம் என்பவரை எனக்கு 30 ஆண்டுகாலமாக தெரியும். அவர் எனக்கு உறவு முறை இல்லை. அவர் ஒரு சங்கத்தில் தலைவராக இருந்தார் என்றால் அப்படி என்ன சங்கம் என்று எனக்கு தெரியவில்லை. நான் பரமானந்தம் என்பவருக்கு எதிராக பல வழக்குகள் தாக்கல் செய்தும் சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் அவருக்கு எதிராக நான் தாக்கல் செய்திருந்த வழக்கில் பராமனந்தம், பாணர் குல தையல்காரர்கள் சங்கம் என்று

சொல்லிதான் அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்திருந்தேன்என்று சொன்னால் சரிதான்.ஆனால் அவர் அப்படி ஒரு எந்த சங்கமும் இல்லை என்று தகவல்அறியும் உரிமை சட்டம்மூலமாக நான் தகவல் தெரிந்துகொண்டேன். அபபடி ஒரு சங்கம் செயல்படவில்லை என்று சொல்லிதான் நான் இந்த வழக்கில் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்தசங்கம் செயல்படுகிறதா இல்லையா என்று சொல்லி நான் மாவட்ட பதிவாளரிடம் எதற்காக மனுவை தாக்கல் செய்தேன் என்று கேட்டால் பொய்யாக ஒரு சங்கம் இருப்பதாக சொன்னதால் அப்படி ஒரு சங்கம் உள்ளதா என்பதை அறிந்துகொள்ள வேண்டியே நான் ஒருமனு தாக்கல் செய்திருந்தேன். நான் மனுப்போட்டு கேட்ட இந்த சங்கத்திற்கு உட்பட்ட கோவில் தான் இந்த வழக்குரை கோவில் என்றால் அது சரியல்ல. நான் இந்த சங்கத்தில் தலைக்கட்டு வரியாக எத்தனை ஆண்டு காலம் வரிவசூல் செய்துவந்தேன் என்று கேட்டால் நான் 1984ம் ஆண்டு முதல் செயற்குழு உறுப்பினராக அவ்வப்போது இந்த திருக்கோவிலில் இருந்து வந்தேன். என்னிடம் காட்டப்படும் 28.02.2008ம் ஆண்டுக்கான அருள்மிகு ஸ்ரீகம்ப காமட்சியம்மன் ஸ்ரீகாத்தவராயன் திருக்கோவில் திருவிழா வரி வசூல் ரசீதை திரு.எஸ். கணேசன் (ரசீது எண்.1) மற்றும் திரு.எஸ்.மூர்த்தி (ரசீது எண்.2) நான் தான் போட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ரசீதுகள் **பி.வா.சா.ஆ.1 வரிசைகள்**. என்னுடைய தாயார் பெயர் ஜெயராமு அம்மாள். என்னுடைய தாயாரும் வழக்கில் உள்ள 3ம் பிரதிவாதி பாலமுருகனின் தாயாரும் சித்தப்பா மக்கள் மற்றும் பெரியப்பா மக்கள் என்றால் இல்லை. 2ம் எதிர்வாதி பேயாண்டிக்கும் எனக்கும் எந்தவிதமான உறவு முறையில்லை. பேயாண்டி என்பவர் எனக்கு அண்ணன் முறை வேண்டும் என்றால் அப்படியில்லை. இந்த வழக்கின் வாதியான மனோகரன் என்பவருக்கு குலதெய்வமானது குருஞ்சாக்குளம் அருள்மிகு ஸ்ரீகல்கோட்டை 18ம் படி கருப்பசாமி திருக்கோவில் என்று சொன்னால் அப்படியில்லை. பொதுவாக ஒருவர் தன்னுடைய மகனுக்கோ, அல்லது பேரக்குழந்தைக்கோ முதல் மொட்டையானதை எந்த கோவிலில் வைத்து போடுவார் என்று கேட்டால் அது அவர் அவருடைய விருப்பம் ஆகும். நான் சொல்வது தவறு என்றும் பொதுவாக முதல் மொட்டையானதை அவர்களுடைய குலதெய்வ கோவிலில் வைத்து தான் போடுவார்கள் என்று சொன்னால் அது சரியல்ல. பிச்சகைக்கனி என்பவருக்கு குலதெய்வ கோவிலானது கள்ளிக்குளம் அருள்மிகு ஸ்ரீசேலைக்காரி அம்மன் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மனோகரன் மற்றும் பிச்சைக்கனி ஆகியோர்களுக்கு அருள்மிகு ஸ்ரீகம்ப காமட்சியம்மன் காத்தவராயன் திருக்கோவில் ஆனது குலதெய்வ கோவில்கள் அல்ல என்று சொன்னால் அது சரியல்ல. என் தகப்பனார் தையல் வேலை தான் செய்தார். அவர் வழக்கில் உள்ள 3ம் எதிர்வாதியான என்.எஸ்.பாலமுருகன் வீட்டில் தான் தையல் கடையை வைத்திருந்தார் என்றால் அப்படியில்லை. பிச்சகைக்கனியும் நானும் ஒரே சமூகத்தை சார்த்தவர்கள் என்றால் சரிதான். சிவகாசி மாவட்ட உரிமையயில் நீதிமன்றத்தில் நடைபெற்ற அ.வ.எண்.32/2012 என்ற வழக்கில் பிச்சகைக்கனியை நான் எதிர்வாதியாகத் தான் சேர்த்திருந்தேன் என்றால் சரிதான். நான் அந்த வழக்கில்

அவரை மோசடியாக எதிர்வாதியாக சேர்த்து தான் உத்தரவு வாங்கியுள்ளேன் என்று சொன்னால் அது பொய். நான் சொல்லும் அருணாச்சலம் என்பவர் வணிக வரித்துறையில் பணியில் இருந்தவர் என்றால் சரிதான். அவர் தாவா திருக்கோவிலில் தலைவராக இருந்துள்ளார். சிவகாசி உரிமையில் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்திருந்த அந்த வழக்கில் என்னை யார் செயலாளராக தேர்ந்தெடுத்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்று கேட்டால் நான்கு சமுதாய மக்கள் கூடி தேர்ந்தெடுத்ததாக கூறியுள்ளேன். அதில் நிர்வாக தலைவராக அருணாச்சலம் என்பவர் இருந்தார் என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் அவ.எண்.229/2012 ல் வா.சா.ஆ.22 ஆவணமாக சிவகாசி மாவட்ட உரிமையியில் நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டதின் ஜெராக்ஸ் நகலை காண்பித்து மேற்படி திருக்கோவிலுக்கு என்னை செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன் என்றும் அதில் என்னுடைய கையொப்பம் உள்ளது என்று சொன்னால் அது சரிதான். மேற்படி ஆவணம் **பி.வா.சா.ஆ.2**. என்னை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக சொல்லும் மேற்படி பி.வா.சாஆ.2 ஆவணத்தில் நான் சொல்லும் நான்கு ஜாதிகளையும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி பி.வா.சாஆ.2 ஆவணப்படிக்கு டி.மனோகரன் என்பவரின் தலைமையில் நடைபெற்ற கூட்டதில் தான் என்னை செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி கூட்டத்தில் என்னை செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு மேற்படி' அ.வ.எண்.229/2012 யை நான் எதற்காக தாக்கல் செய்தேன் என்று கேட்டால் பிச்சைக்கனி மற்றும் ராஜேந்திரன் என்பவர்கள் தொண்டைமான் சமூகத்தை சார்ந்த கோவில் என்று பிரச்சனை செய்ததால் தான் நான் அந்த வழக்கை தாக்கல் செய்தேன். என்னிடம் காட்டப்படும் 04.09.2011 ம் தேதியிட்ட தொண்டைமான் சமுதாய கட்டிட திறப்பு விழா அழைப்பிதழில் வி.பி.பிச்சைக்கனி தலைவர் என்று போடப்பட்டுள்ளது என்று கேட்டால் அது சரிதான்.மேற்படி பிச்சைக்கனி என்பவர் என்னுடைய உறவினரா என்று கேட்டால் உறவினர் இல்லை. மேற்படி ஆவணம் **பி.வா.சா.ஆ.3.** பி.வா.சா.ஆ.1 ரசீதுகளில் நான்கு சமுதாயம் பெயர்களை குறிப்பிடப்பட்டுள்ளதா என்று கேட்டால் அந்த ரசீதுகளில் குறிப்பிடப்படவில்லை. 2014 ம் ஆண்டுக்கு பிறகு உள்ள வரி ரசீதுகளில் நான்கு சமுதாயம் பெயர்களில் உள்ளது. 2011 ம் ஆண்டு நான் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் CRL.O.P(MD) No.3165 of 2011 என்று தாக்கல் செய்திருந்த குற்றவியில் பல்வகை மனுவில் அருள்மிகு ஸ்ரீகம்ப காமட்சியம்மன் ஸ்ரீகாத்தவராயன் திருக்கோவில் நிர்வாக கமிட்டியின் செயலாளர் முத்துக்குமார் என்று மட்டுமே சொல்லி நான் தாக்கல் செய்திருந்தேன் என்றும் அதில் நான்கு சமுதாயங்களையும் குறிப்பிட்டு என்னால் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி குற்றவியல் பல்வகை மனுவில் பிறந்த உத்தரவு **பி.வா.சா.ஆ.4**. நிர்வாக தலைவர் அருணாச்சலம் என்பவரின் அப்பா பெயர் என்னவென்று கேட்டால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் 1975 ம் வருடத்திய தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம் மற்றும் 1978 ம் வருடத்திய தமிழ்நாடு சங்கங்கள் பதிவு விதிகளின் கீழ் பதிவு செய்ய விரும்பு இருசு சாட்சிகளின்

**முன்னிலையில் கையொப்பம் செய்துள்ளோம் என்று சொல்லி அதில் நிர்வாகஸ்தர்கள் பெயர் விலாசம் மற்றும் பதவி என்ற இடத்தில் என்னை வரிசை எண்.3 ல் காண்பித்து அதில் செயலாளர் என்று சொல்லில் அதில் என்னுடைய கையொப்பம் உள்ளது என்றும் அதில் வரிசை எண்.1 ல் வாசிமலை மகன்அருணாச்சலம்என்றும்அவர் தலைவர் பதவியில் உள்ளதாகவும் சொல்லி அவருடைய கையொப்பமும் உள்ளது என்றால் சரிதான் . மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.5. இந்த அருணாச்சலம் யார் என்பது எனக்கு தெரியும். நான் மோசடியாக ஒரு நபரை சேர்த்து பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. கோவில் கும்பாபிசேகம் மற்றும் திருவிழாக்களுக்கு நன்கொடை வசூல் செய்துகொள்ள வேண்டி என்னிடம் சொல்லப்பட்டு நானும் நன்கொடைகளை வசூல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வசூல் தொகை எவ்வளவு என்ற கணக்கை நான் அந்த கமிட்டியிடம் ஒப்படைத்துள்ளேனா என்று கேட்டால் ஒப்படைத்துள்ளேன்.**

**(குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 25th day of July 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.